# பத்திரிக்கை செய்தி குறிப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2012 முதன்மை அங்கன்வாடி மையங்களும், 194 குறு அங்கன்வாடி மையங்களும் செயல்படுகிறது. மேற்படி அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் தற்போது மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் அங்கன்வாடியில் சேர்க்கப்படுகிறார்கள்.

அங்கன்வாடி மையங்களில் 2 வயது முதல் 3 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு மாதாமாதம் எடை எடுக்கப்பட்டு, வளர்ச்சிநிலை கண்காணிக்கப்படுகிறது. அனைத்து குழந்தைகளுக்கும் இணை உணவும், மதிய உணவும், வாரத்திற்கு 3 நாட்களுக்கு முட்டையும் வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கு அனைத்து வளர்ச்சிகளும் கிடைக்கக்கூடிய வகையில் தரமான முன்பருவக் கல்வி அங்கன்வாடி மையங்களில் நாள்தோறும் வழங்கப்படுகிறது. குழந்தைகள் ஊட்டசச்சத்து நிறைந்தவர்களாகவும், கற்றல் திறன் மேம்பட்டவர்களாகவும் விளங்கிட அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளை சேர்த்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள அங்கன்வாடி மையத்தினை அனுகி தெரிந்துகொள்ளவும்.